# Tamil Composition (Paper 1)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | **தொகுதி 1** | |
| 1 | உன்னைக் கவர்ந்த ஆசிரியர் ஒருவரைப் பற்றியும், அவர் உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக. | 1 – 3 |
| 2 | சிங்கப்பூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழ்மொழி விழாக்கள் உனது மொழியை மேம்படுத்திக் கொள்ள எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கி எழுதவும். | 4 – 6 |
| 3 | இக்காலச் சிங்கப்பூரர்களுள் பெரும்பாலானோர் தன்னலமிக்கவர்களாக இருக்கிறார்கள். இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்? | 7 – 8 |
| | **தொகுதி 2** | |
| 4 | பெற்றோர்களே பிள்ளைகளின் உயர்வு தாழ்வுக்குக் காரணமாவர், இது குறித்து உமது கருத்தை எழுதுக. | 9 – 11 |
| 5 | அண்மையில் நடந்த இயற்கைப் பேரிடர்க்காக உன் பள்ளி ஏற்பாடு செய்திருந்த நிதி திரட்டும் நிகழ்ச்சியில் நீ கலந்து கொண்டதன் மூலம் உனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கவும். | 12 – 14 |
| 6 | வாழ்க்கையில் எந்தப் பிடிப்பும் இல்லாமல் உள்ள உன் நண்பனுக்கு நீ செய்த உதவி. | 15 – 16 |
| | **தொகுதி 3** | |
| 7 | ஒரு மாணவர் வாழ்க்கையில் வெற்றியடையத் தேவையான பண்புகள் யாவை என்பதை விளக்கி எழுதுக. | 17 – 19 |
| 8 | இக்காலத் தகவல் தொழில்நுட்பத்தால் ஏற்படும் நன்மை, தீமைகளை விளக்கி எழுதுக. | 20 – 22 |
| 9 | தொலைக்காட்சியில் நீ விரும்பிப் பார்த்த ஒரு நிகழ்ச்சியும், அது உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக. | 23 – 24 |

| | | |
|---|---|---|
| | **தொகுதி 4** | |
| 10 | உமது பள்ளி ஏற்பாடு செய்த விடுமுறை முகாமில் கலந்துகொண்டு நீவிர் அடைந்த பயன்களையும், அதன்மூலம் நீ எவ்வாறு உம்மை மேம்படுத்திக் கொண்டாய் என்பதையும் விளக்கி எழுதுக. | 25 – 27 |
| 11 | பள்ளியின் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவற்றை மாணவர்கள் பாதுகாப்பதற்கான வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | 28 – 30 |
| 12 | இக்கால மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் உள்ள பிணைப்பை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும், அதனால் ஏற்படும் பயன்களையும் விவரித்து எழுதுக. | 31 – 32 |
| | **தொகுதி 5** | |
| 13 | நீ கண்டு மகிழ்ந்த ஒரு திரைப்படத்தைப் பற்றியும், அது உனது நினைவில் நிற்பதற்கான காரணத்தையும் விவரித்து எழுதுக. | 33 – 35 |
| 14 | நீ முடிவெடுக்கச் சிரமப்பட்ட ஒரு பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டது என்றும், அதற்காக நீ மேற்கொண்ட செயல்களையும், சந்தித்த சவால்களையும் விவரித்து எழுதுக. | 36 – 38 |
| 15 | பள்ளிகள் ஏற்பாடு செய்யும் வெளிநாட்டுக் கற்றல் பயணங்கள் ஒரு மாணவனின் முழுமைக் கல்விக்குத் துணைபுரிகின்றன. கருத்துரைக்க. | 39 – 40 |
| | **தொகுதி 6** | |
| 16 | உமது பள்ளியில் நீவிர் ஏற்படுத்த விரும்பும் மாற்றங்களைப் பற்றி விவரித்து எழுதுக. | 41 – 43 |
| 17 | உன் குடும்பத்தில் ஏற்படவிருந்த ஒரு விபரீதத்தை நீ எவ்வாறு பொறுப்புடன் இருந்து சமாளித்தாய் என்பதையும், அதைச் சமாளிக்கும்போது நீ எதிர்நோக்கிய சவால்களையும் விவரித்து எழுதுக. | 44 – 46 |
| 18 | வாழ்க்கையில் ஒருவரை முன்னேறச் செய்வது கல்வியே. இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்வாயா? (ஏற்றுக்கொள்கிறேன் என்ற அடிப்படையில் அமைந்த கருத்துகள்) | 47 – 48 |
| | **தொகுதி 7** | |
| 19 | நூல் வாசிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அதை மாணவர்களிடம் வளர்ப்பதற்கான வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | 49 – 51 |
| 20 | உமது ஆசிரியர் உம்மீது வைத்த நம்பிக்கையால் உம்மிடமிருந்த திறமை வெளிப்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது நம்பிக்கையைப் பொய்யாக்காமல் உம்மை நிரூபித்துக் கொண்ட அனுபவத்தை விளக்கி எழுதுக. | 52 – 54 |
| 21 | நல்ல நண்பர்களின் அவசியத்தையும், அவர்களுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளும் வழிவகைகளையும் விவரித்து எழுதுக. | 55 – 57 |

| | | |
|---|---|---|
| | **தொகுதி 8** | |
| 22 | நீவிர் போற்றும் ஒருவருடைய நற்பண்புகளையும், அவர் செய்த நற்செயல்களையும் விளக்கி எழுதுக. | 58 – 59 |
| 23 | நீ இனிமேல் சந்திக்கவே கூடாது என்று முடிவெடுத்திருந்த நண்பர் ஒருவரைப் பல வருடங்களுக்குப் பின் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவரை ஏன் சந்திக்கக் கூடாது என்று நினைத்தாய் என்பதையும், அவரை மீண்டும் சந்தித்த போது உனக்கு ஏற்பட்ட மனநிலையையும், பாதிப்புகளையும் விளக்கி எழுதுக. | 60 – 62 |
| 24 | நீ பெருவிரைவுப் போக்குவரத்து இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்த போது நடந்த ஒரு சம்பவம் உன்னை வருத்தமடையச் செய்தது. அது என்ன சம்பவம் என்றும், அது உன்னை வருத்தமடையச் செய்ததற்கான காரணங்களையும் விவரித்து எழுதுக. | 63 – 64 |
| | **தொகுதி 9** | |
| 25 | ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் அவசியத்தைப் பற்றியும், அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகளையும் எழுதுக. | 65 – 67 |
| 26 | உனக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவத்தையும், அதன்மூலம் நீ கற்றுக்கொண்ட படிப்பினையையும் விளக்கி எழுதுக. | 68 – 69 |
| 27 | உன் நீண்ட நாள் பழக்கமொன்று மாறுவதற்குக் காரணமாக அமைந்த சம்பவத்தையும், அதன்மூலம் நீ கண்ட மாற்றத்தையும் விவரித்து எழுதுக. | 70 – 71 |
| | **தொகுதி 10** | |
| 28 | நண்பர்களின் செல்வாக்கு ஒருவரது வாழ்வில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்னும் கருத்தை நீ ஏற்றுக் கொள்கிறாயா? ஏன்? | 72 – 74 |
| 29 | நீ செய்யாத ஒரு குற்றத்திற்காக உன் மீது பழி சுமத்தப்பட்டது. அது எவ்வாறு நடந்தது என்றும், அதன்மூலம் நீ எவ்வாறு பாதிக்கப்பட்டாய் என்றும் விவரித்து எழுதுக. | 75 – 77 |
| 30 | “தோல்வியே வெற்றிக்கு முதல் படி” என்பதை உணர்ந்து நீ வாழ்வில் வெற்றி கண்ட சம்பவத்தையும், அதன்மூலம் நீ பெற்ற அனுபவத்தையும் விளக்கி எழுதுக. | 78 – 79 |
| | **தொகுதி 11** | |
| 31 | மாணவர்களாகிய நீங்கள் உங்கள் குடும்பத்தின் பாரத்தை எவ்வாறு குறைக்கலாம்? | 80 – 82 |
| 32 | காலத்தின் அருமையைப் பற்றி உனக்கு உணர்த்திய ஒரு சம்பவத்தைப் பற்றியும், அதன்மூலம் நீ கற்றுக்கொண்ட பாடத்தைப் பற்றியும் விவரித்து எழுதுக. | 83 – 85 |
| 33 | இன்றைய இளையர்கள் எதிர்நோக்கும் சவால்களையும், அவற்றை எவ்வாறு அவர்கள் சமாளிக்கலாம் என்பதனையும் விளக்கி எழுதுக. | 86 – 87 |


WORDSMITH BEYOND LEARNING

| | | |
|---|---|---|
| | **தொகுதி 12** | |
| 34 | இளைஞர்கள் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மதிப்பதில்லை என்ற கருத்தை விவரித்து எழுதவும். | 88 – 90 |
| 35 | இப்படித்தான் முடியும் என்று நீ நினைத்திருந்த ஒரு சம்பவம் நீ எதிர்பாராத விதத்தில் முடிந்தது. அது என்ன சம்பவம் என்றும், அது நீ எதிர்பார்த்த விதத்தில் முடியாத காரணத்தையும் விவரித்து எழுதுக. | 91 – 93 |
| 36 | “சிங்கப்பூர் வாழ்வதற்கேற்ற வளமிக்க நாடு” இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்? | 94 – 95 |
| | **தொகுதி 13** | |
| 37 | சாதிக்க இயலாதது எதுவுமில்லை என்று உம்முடைய நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்த சம்பவம் ஒன்றினை விளக்கி எழுதுக. | 96 – 98 |
| 38 | உனக்கு விருப்பமில்லாத செயல் ஒன்றினைச் செய்யும் கட்டாயத்திற்கு நீ ஆளாக்கப்படுகிறாய். அச்சம்பவம் எவ்வாறு நடந்தது என்றும், அது உன்னை எவ்வகையில் பாதித்தது என்றும் விவரித்து எழுதுக. | 99 – 101 |
| 39 | சிங்கப்பூரர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளில் குடியேற விரும்புவதில்லை - கருத்துரைக்க. | 102 – 103 |
| | **தொகுதி 14** | |
| 40 | நீ மிகவும் விரும்பும் ஒரு தலைவர் பற்றியும் அவர் உன்னைக் கவர்ந்த காரணத்தையும் விவரித்து எழுதுக. (திரு.லீ குவான் இயூ) | 104 – 105 |
| 41 | விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தால் உன் மனம் வருத்தமடைந்தது. அது என்ன சம்பவம் என்றும், அது உன்னை வருத்தமடையச் செய்ததற்கான காரணத்தையும் விவரித்து எழுதுக. | 106 – 108 |
| 42 | உதவும் மனப்பான்மையை எவ்வாறு சிங்கப்பூரர்களிடையே வளர்க்கலாம் என்பதற்கான ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் விளக்கி எழுதுக. | 109 – 110 |
| | **தொகுதி 15** | |
| 43 | நட்பின் சிறப்பை உனக்கு உணர வைத்த ஒரு சம்பவம் பற்றி விளக்கி எழுதவும். | 111 – 113 |
| 44 | வாய்ப்புக் கிடைத்தபோது நீ அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியதால் உன் முன்னேற்றம் தடைப்பட்டுப் போனது. அது எவ்வாறு நடந்தது என்பதையும், அதன் மூலம் நீ தெரிந்துகொண்ட உண்மைகளையும் விவரித்து எழுதுக. | 114 – 116 |
| 45 | சிங்கப்பூரர்கள் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள் கருத்துரைக்க. | 117 – 118 |

| | | |
|---|---|---|
| | **தொகுதி 16** | |
| 46 | விளையாட்டுத்தனமான ஒரு செயல் விபரீதத்தில் முடிந்தது. அந்தச் சம்பவத்தை விவரித்து எழுதுக. | 119 – 121 |
| 47 | இக்கால இளைஞர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது, நண்பர்களின் தகாத சேர்க்கையும் ஆடம்பர வாழ்கைமுறையுமே என்ற கருத்தை நீ ஏற்றுக் கொள்வாயா? ஏன்? | 122 – 124 |
| 48 | துணைப்பாட வகுப்புகளினால் ஏற்படும் நன்மைத் தீமைகளைப் பற்றி விளக்கி எழுதுக. | 125 – 126 |
| | **தொகுதி 17** | |
| 49 | மாணவர்களிடையே சமூக சேவையை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பதை விவரித்து எழுதுக. | 127 – 129 |
| 50 | தண்ணீர் சேமிப்பின் அவசியத்தையும், அதைப் பற்றிச் சிங்கப்பூரர்களுக்கு வலியுறுத்த நீ கூறும் வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | 130 – 131 |
| 51 | உன்னுடைய தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வழி செய்த ஒரு சம்பவத்தை விளக்கி எழுதுக. | 132 – 133 |
| | **தொகுதி 18** | |
| 52 | உன் குடும்பத்தார் நட்புணர்வோடு பழகுவதில்லை என்றும், தம்முடைய உணர்வுகளை மதித்து நடப்பதில்லை என்றும் உன் அண்டைவீட்டார் கருதினர். ஆனால் நீயும் உன் குடும்பத்தினரும் செய்த செயல் ஒன்று அவருடைய எண்ணத்தை மாற்றியது. நீயும் உன் குடும்பத்தாரும் என்ன செய்தீர்கள் என்பதனையும், அதிலிருந்து நீ பெற்ற படிப்பினையையும் விவரித்து எழுதவும். | 134 – 135 |
| 53 | இனநல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும், அதை சிங்கப்பூரர்களிடம் வளர்ப்பதற்கு நீ கூறும் சில ஆலோசனைகளையும் விளக்கி எழுதுக. | 136 – 138 |
| 54 | விடாமுயற்சியே வெற்றிக்கு வழி என்பதை உனக்கு உணர்த்திய அறிஞர் ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றியும், அது உனக்குக் கற்றுக் கொடுத்த பாடத்தையும் விளக்கி எழுதுக. | 139 – 140 |
| | **தொகுதி 19** | |
| 55 | நீ உன் பெற்றோருக்குப் பெருமை சேர்த்த ஒரு செயலை எழுது. | 141 – 143 |
| 56 | சிங்கப்பூரில் குற்றச்செயல்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும், அவற்றைக் குறைப்பதற்கான ஆலோசனைகளையும் விளக்கி எழுதுக. | 144 – 146 |
| 57 | உன் வகுப்பில் அயல்நாட்டு மாணவன் ஒருவன் புதிதாக வந்து சேர்கிறான். வகுப்பில் இருக்கும் மற்ற மாணவர்கள் அவன் பேசுவதைக் கிண்டல் செய்து அவனை மனவருத்தம் அடையச் செய்கின்றனர். இதனைக் கண்ட | 147 – 148 |


WORDSMITH

| | | |
|---|---|---|
| | நீ, அயல்நாட்டு மாணவனுக்கு ஆறுதல் கூறுவதோடு, மற்ற மாணவர்கள் தங்கள் தவற்றை உணரும்படிச் செய்கிறாய். இச்சம்பவத்தை விவரித்து எழுதுவதோடு, அதன்மூலம் நீ மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுத்த படிப்பினையையும் எழுதுக. | |
| | **தொகுதி 20** | |
| 58 | நம் நாட்டில் கொண்டாடப்படும் விழாக்கள் சிங்கப்பூரர்களிடம் ஒற்றுமையையும் பிணைப்பையும் ஏற்படுத்துகின்றன - கருத்துரைக்க. | 149 – 151 |
| 59 | பணிப்பெண்கள் சிங்கப்பூரர்களுக்குச் சுகமா, சுமையா? - கருத்துரைக்க. | 152 – 154 |
| 60 | தொழில்நுட்பம் இக்கால இளையர்களை அதிகச் சோம்பேறிகளாக்கிவிட்டது - கருத்துரைக்க. | 155 – 156 |


WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

# பொருளடக்கம் – மின்னஞ்சல்


| தொகுதி | மின்னஞ்சல் வகை | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | a. அலுவலக மின்னஞ்சல் | புகார் செய்தல் - வினா | 159 – 159 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | அறிவுரை கேட்டல் - வினா | 159 – 159 |
| 2 | a. அலுவலக மின்னஞ்சல் | விமர்சனம் செய்தல் - வினா | 160 – 160 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | ஆலோசனை கேட்டல் - வினா | 161 – 161 |
| 3 | a. அலுவலக மின்னஞ்சல் | அனுமதி கேட்டல் - வினா | 162 – 162 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | தகவல் கேட்டல் - வினா | 162 – 162 |
| 4 | a. அலுவலக மின்னஞ்சல் | விண்ணப்பித்தல் - வினா | 163 – 163 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | பகிர்ந்துகொள்ளுதல் - வினா | 163 – 163 |
| 5 | a. அலுவலக மின்னஞ்சல் | மன்னிப்புக் கேட்டல் - வினா | 164 – 164 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | பரிந்துரைத்தல் - வினா | 164 – 164 |
| 6 | a. அலுவலக மின்னஞ்சல் | தகவல் கேட்டறிதல் - வினா | 165 – 165 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | தகவல் அறிவித்தல் - வினா | 165 – 165 |
| 7 | a. அலுவலக மின்னஞ்சல் | பரிந்துரைத்தல் - வினா | 166 – 166 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | பாராட்டு தெரிவித்தல் - வினா | 166 – 166 |
| 8 | a. அலுவலக மின்னஞ்சல் | பாராட்டு தெரிவித்தல் - வினா | 167 – 167 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | நன்றி தெரிவித்தல் - வினா | 167 – 167 |
| 9 | a. அலுவலக மின்னஞ்சல் | ஆலோசனை கூறுதல் - வினா | 168 – 168 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | மன்னிப்புக் கேட்டல் - வினா | 168 – 168 |
| 10 | a. அலுவலக மின்னஞ்சல் | முறையிடுதல் வினா | 169 – 169 |
| | b. உறவுமுறை மின்னஞ்சல் | விளக்கம் கேட்டல் - வினா | 169 – 169 |
| 11 | விடைத்தாள்கள் | அலுவலக மின்னஞ்சல் - 1a to 10a<br>உறவுமுறை மின்னஞ்சல் - 1b to 10b | 171 – 202 |


WORDSMITH
BEYOND LEARNING

# தொகுதி 1

## Model Compo - மாதிரிக் கட்டுரை

### 1. உன்னைக் கவர்ந்த ஆசிரியர் ஒருவரைப் பற்றியும், அவர் உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக.

'ஒரு விதைக்குத் தாய் என்பது மண்' என்றால், 'தந்தை என்பது நீர்' என்றால், அந்த விதையானது தாயால் உயிர் பெறும், தந்தையால் வளம் பெறும். ஆனால் செழித்து வளராது. அதற்குத் தேவை நல்ல உரம். அந்த **உரமாய்** இருந்து ஒரு சிறுவிதையை மாபெரும் **விருட்சமாய்** உருவாக்குபவர்கள்தாம் நல்ல ஆசிரியர்கள். எனவேதான், 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என நம் பழந்தமிழ்ப் பெரியோர்கள் ஆசிரியர்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்திப் போற்றினார்கள். நமது சமூகத்தில் ஆசிரியர்களுக்கு அன்றும் இன்றும் நல்ல புகழும், நீடித்த பெயரும் நிலைபெற்றுள்ளது. ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையும், கண்ணியம் மிக்க கல்விப் பணியுமே இதற்குக் காரணங்கள். எனக்கு ஆசிரியர்கள் மீது எப்போதும் மிகுந்த மரியாதையும், நிறைந்த அன்பும் உண்டு. அந்த வகையில் எனது நெஞ்சில் நீங்கா இடம் பிடித்த ஆசிரியர்கள் வரிசையில் என் தமிழாசிரியர் திரு.தங்கபாண்டியனும் ஒருவர். அவர் எவ்வாறு எனது உள்ளத்தைக் கவர்ந்தார் என்பதையும், அவர் கற்பித்த பாடங்கள் எவ்வாறு எனது உள்ளத்தைக் கவர்ந்து எனக்குச் சுவையளித்தன என்பதையும் கீழே விவரிக்க உள்ளேன்.

எனக்கு எல்லாப் பாடங்களும் விருப்பம் என்றாலும். தமிழ்ப்பாடம்மீது எனக்கு எப்போதும் தனிப்பிரியம் உண்டு. எனது உயர்நிலை மூன்றிலும் நான்கிலும் எனக்குத் தமிழ்ப்பாடம் கற்பித்துக் கொடுத்தவர் திரு. தங்கபாண்டியன் ஆவார். தமது கம்பீரமான தோற்றத்தாலும், **கண்ணியமான** பேச்சினாலும், கருத்தாழம் மிக்க **கவின்மிகு** கற்பித்தல் திறனாலும், முதல் வகுப்பிலேயே அவர் என்னை மிகவும் கவர்ந்துவிட்டார். எனக்கு மட்டுமன்று, என் வகுப்பு மாணவர்கள் அனைவரின் உள்ளத்திலும் அவர் ஒரு நாளிலேயே உயரிய இடத்தைப் பிடித்து விட்டார். சிங்கப்பூர் சூழலில் பொதுவாகத் தாய்மொழிப் பாடங்களில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், கற்பிக்கும் ஆசிரியர்களும் பாடங்களை அவர்கள் கற்பிக்கும் போக்கும் முக்கியக் காரணங்கள் என நான் கருதுகிறேன். கற்பிக்கும் திறனும், கனிவான நெஞ்சமும் கொண்ட ஆசிரியர்கள் மட்டும் மாணவர்களுக்கு அமைந்துவிட்டால், எந்தப் பாடமும் அவர்களுக்குக் கசப்பாக இருக்காது என்பது எனது தாழ்மையான கருத்து.

ஆசிரியர் திரு.தங்கபாண்டியன், தமிழ் இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தவர் என்றால் அது மிகையாகாது. அந்தக்காலச் சங்க இலக்கியங்கள் முதல் இந்தக் கால "ஹைக்கூ" கவிதை வரை அவருக்கு அத்துப்படி. அவரிடம் பாடங்களில் எந்தச் சந்தேகத்தையும் எப்போது வேண்டுமானாலும் கேட்கலாம். "நாளை சொல்கிறேன்" என்னும் வார்த்தை அவர் வாயிலிருந்து வரவே வராது. கேட்கும் ஐயங்களுக்குத் தெளிவான பதில் அளித்துச் சந்தேகங்களை உடனுக்குடன் போக்குவார். 'பெண்ணாசையால் விளைந்தது இராமாயணம், மண்ணாசையால் விளைந்தது மகாபாரதம்' எனத் தமிழின் இரண்டு பெரிய காப்பியங்களை ஆசிரியர் ஒரே

வரியில் சுருங்கச் சொல்லி விளக்கிடுவார். **‘பால் நகையாள்,** வெண்முத்துப் பல்நகையாள், கண்ணகியாள் தன் கால் நகையால் கழுத்து நகை இழந்த கதை’ எனச் சிலப்பதிகாரத்தைப் புதுக்கவிதை மூலம் அவர் விளக்கிய விதம் இன்னும் எனது நெஞ்சில் **நிழலாடுகின்றது.** அவர், தமிழிலக்கியப் பாடங்களை நடத்தும்போது மாணவர்களை அந்தக்காலச் சூழலுக்கே அழைத்துச் செல்வார். கதை **மாந்தர்களின்** உணர்வுகளோடு மாணவர்களின் உணர்வுகளையும் ஒன்றிணையச் செய்வார். கதைகளில் அவர்கள் சிரிக்கும்போது மாணவர்களும் சிரிப்பர், அவர்கள் சோகத்தில் அழும்போது மாணவர்களும் அழுவர். தமிழ்மொழி மிக உயர்ந்தச் செம்மொழி என்பதையும், காலத்தைக் கடந்து இன்றும் வாழும்மொழியாக அது இருக்கிறது என்பதையும், எனக்கு உணர்த்தியவர் அவரே! தமிழ்மொழி மீது பற்றும், மேலும் மேலும் தமிழைக் கற்கவேண்டும் என்னும் **தாளாத** ஆர்வமும், அவர் மூலமே எனக்கு வந்தது என்பது உண்மையிலும் உண்மை.

என் ஆசிரியர் கல்வியில் எவ்வளவு தூரம் கரை கண்டவரோ அவ்வளவு தூரம் கனிவான உள்ளத்திலும் கங்குகரை காணாதவர் ஆவார். என் வகுப்புத்தோழன் இரமணன் வசதி குறைந்த குடும்பத்தைச் சார்ந்தவன். பெரும்பாலும் காலை உணவு சாப்பிடாமலேயே பள்ளிக்கு வருவான். பள்ளி உணவகத்திலும் வாங்கிச் சாப்பிட அவனுக்கு வசதி இருக்காது. இது யாருக்கும் தெரியாது. ஆனால், இதை அறிந்த என் ஆசிரியர் பள்ளி உணவகத்தில் தமது செலவில் தினமும் உணவு வழங்க ஏற்பாடு செய்தார். அதனோடு நின்று விடாமல், ‘சிண்டா’ மூலம் **நிரந்தர** உதவி கிடைக்க வழி வகை செய்தார். ஊனமுற்ற தம் தந்தையாருக்காக அவர் திருமணம் செய்துகொள்ளாமல் அவர்களோடு அவர் சேர்ந்து வாழ்கின்றார். இதனை என் நண்பன் மூலம் அறிந்த நான் இந்தக் காலத்திலும் இப்படி ‘ஒரு மனிதரா?’ என வியந்து போனேன்.

திரு.தங்கபாண்டியன் ஆசிரியர், சிறந்த கல்விமான், உயர்ந்த குணவான். அவர் மிகுந்த கண்டிப்பும் நிறைந்தவர் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அரையாண்டுத் தேர்வில் கணிதப்பாடத்தில் இன்னொரு மாணவனைப் பார்த்து எழுத முயற்சி செய்த என் வகுப்புத் தோழி மாதவிக்கு எந்தப் பரிவும் காட்டாமல் பள்ளித் தேர்வுக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்துத் தண்டனை வாங்கித் தந்தார். மாதவி, அவருக்குப் பிடித்த மாணவியருள் ஒருத்தி. ஆனாலும், ஒழுங்கீனத்தையும் தவறான நடத்தையையும் யார் கொண்டிருந்தாலும் அது அவருக்கு அறவே பிடிக்காது என்பதால், அவளிடம் அவர் சிறிதும் இரக்கம் காட்டவில்லை. ஒழுக்க**க்கோட்பாடுகளையும்** உயர்ந்த பண்புகளையும் மாணவர்கள் எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுவிடக்கூடாது என்பது, அவர் எங்களுக்குப் போதித்த முக்கிய அறிவுரைகளுள் ஒன்றாகும்.

பாடங்களில் மட்டுமல்லாது, இணைப்பாட நடவடிக்கைகளிலும் அவர் மாணவர்களுக்குத் தூணாக இருந்து தோள் கொடுப்பார். நாடகம், நடனம், பாட்டு, விவாதப்போட்டி முதலிய எல்லாப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்கெடுக்க அவர் ஊக்குவிப்பார். தாமே, குறிப்புகளும் பயிற்சிகளும் கொடுத்து மாணவர்களைப் பயிற்றுவிப்பார். பாடங்கள் முடிந்து வீடு திரும்பாமல் மாலை நேரங்களில் மாணவர்களுடன் இருந்து அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற உதவி செய்வார். நாங்கள் வெறும் **ஏட்டுச்சுரைக்காயாக** மட்டும் இருந்துவிடக்கூடாது என்பதில் முழு அக்கறை கொண்ட எங்கள் ஆசிரியர், விளையாட்டுகளிலும் நாங்கள் **இமயத்தைத்** தொட வேண்டும் என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்றால் அது **மிகையாகாது.**

‘தோல்வி என்பது வெற்றியின் முதல்படி’ இதுதான் ஆசிரியர் தங்கபாண்டியன் எங்களுக்கு அடிக்கடி கூறும் பொன்மொழி. நாங்கள் தேர்விலோ அல்லது விளையாட்டுப் போட்டியிலோ, எதில் தோல்வி கண்டாலும் அதற்கான காரணத்தை ஆராய வேண்டுமே தவிர, மூலையில் உட்கார்ந்து அழக்கூடாது என்னும் அவரது வாசகம் ஒவ்வொரு முறையும் நாங்கள் தோல்வி காணும்போது எங்கள் காதுகளில் ஒலிக்கும். ‘முயற்சியை விடாதவன் ஒருநாள் ஜெயிப்பான், முயற்சி செய்யாதவன் என்றுமே தோற்பான்’ என்று கூறி அவர் எங்களைத் தட்டிக்கொடுப்பார். அவர் கூறியதைப் பின்பற்றியதால் இன்று எங்களில் பலர் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். எங்கள் ஆசிரியரைக் காணும்போது,

‘‘தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்’’

என்றுரைத்த தெய்வப்புலவராகவே காட்சியளித்தார்.

இவ்வாறு, என் ஆசிரியர் தங்கபாண்டியன் ஏட்டுக்கல்வி நிரம்பியவராக மட்டுமே இல்லாமல், மாணவர்களின் இதயங்களையும் வாசிக்கும் திறன் பெற்றவராகவும் இருந்தார். போதிப்பது என்னும் ஒன்றையே போக்காகக் கொள்ளாமல், போதித்ததைச் செயலிலும் செய்து காட்டிய சாதனையாளராகவும் இருந்தார். கல்வியாளராகவும் கனிந்த நெஞ்சினராகவும் மட்டுமே அல்லாது தீமை கண்ட இடத்து அதனை அஞ்சாது அகற்றும் திறன் படைத்தவராகவும் இருந்தார். தோல்வி வந்தபோது எங்களுக்குத் தோள்கொடுக்கும் நல்ல தோழனாக இருந்தார். இத்தகைய இயல்புகளைக் கொண்ட தங்க நெஞ்சினர் ஆசிரியர் திரு. தங்கபாண்டியன், என்றும் என் உள்ளத்தில் தங்கி வாழ்கின்றார்.

WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP 9vanes + achieve BIG

**அருஞ்சொற்பொருள்**

| | |
|---|---|
| உரமாய் | எருவாய் |
| விருட்சமாய் | மரமாய் |
| கண்ணியமான | கௌரவமான |
| கவின்மிகு | அழகு நிறைந்த |
| அத்துப்படி | அனைத்தும் அறிந்த நிலை |
| பால் நகையாள் | பால் போன்ற சிரிப்பினள் |
| நிழலாடுகின்றது | நினைவுக்கு வருகின்றது |
| மாந்தர்களின் | மனிதர்களின் |

| | |
|---|---|
| தாளாத | அடக்க முடியாத |
| நிரந்தர | நிலையான |
| கோட்பாடுகளையும் | கொள்கைகளையும் |
| ஏட்டுச்சுரைக்காய் | வெறும்பாடப்புத்தகத்தை மட்டும் படிப்பது |
| இமயத்தை | உயர்நிலையை |
| மிகையாகாது | அதிகமாகாது |

## பயிற்சி வினா 2 மற்றும் 3

**கீழே உள்ள மனவரைபட குறிப்புக்கட்டுரையையும் (Mindmap Compo), உதவிக் குறிப்புக்கட்டுரையையும், (Hint's Compo) உதவியாக பயன்படுத்தி, கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விக்கு நீ கட்டுரை எழுதவும்.**

2. **சிங்கப்பூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழ்மொழி விழாக்கள் உனது மொழியை மேம்படுத்திக் கொள்ள எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்கி எழுதவும்.**

| முன்னுரை | விளக்கம் |
|---|---|
| | 'தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை;<br>தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை'<br>• தாய்மொழி ஒருவரது அடையாளம்.<br>• தாய்மொழியே கலை, பண்பாடு, ஒழுக்கம் ஆகியனவற்றின் புரிதலுக்கும் மேம்பாட்டுக்கும் அடிப்படை.<br>• தமிழ்மொழிப் **புழக்கம்** குறைந்த சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மொழிப் புழக்கம் வளரவும், தாய்மொழியின் மீது பற்றும் பாசமும் ஏற்படவும் தமிழ்மொழி விழாக்கள் அவசியம் தேவை. |
| கருத்து 1 | |
| அரசாங்கத்தின் ஆதரவும் தமிழ்மொழி விழாக்களும் | • தாய்மொழிக் கல்வியை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது.<br>• ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் முழுவதும் அரசாங்க ஆதரவுடன் பல இடங்களில் தமிழ்மொழி விழாக்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.<br>• பள்ளிகள், கல்லூரிகள், தமிழ் அமைப்புகள் முதலியன இவற்றை நடத்துகின்றன.<br>• எடுத்துக்காட்டுகள்: சொற்களம், சிறுகதைப் பயிலரங்குகள், பாரம்பரியக் கலைநிகழ்ச்சிகள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். |
| கருத்து 2 | |
| **முறைசாராத்** தமிழ் இலக்கிய அறிமுகம் | • பள்ளிப் பாடத்திட்டங்களில் தமிழ் இலக்கிய அறிமுகம் மிகக் குறைவு.<br>• இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், கவி அரங்குகள் **அகண்ட** இலக்கிய அறிவைப் பெறப் பெரும் உதவியாய் உள்ளன.<br>• மாணவர்கள் பார்வையாளர்களாய் வருவதோடு அல்லாமல், தாங்களும் பங்கேற்பாளர்களாகப் பேச்சுப் போட்டி, பாடல் மனப்பாட **ஒப்புவிப்பு**, விவாதக்குழு உறுப்பினர்கள் என நேரடிப் பயிற்சி பெறும் வாய்ப்பு.<br>• இது மாணவர்களின் தமிழ்ப்புலமையை மேம்படுத்தி, அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும். |

WORDSMITH BEYOND LEARNING

| கருத்து 3 | |
|---|---|
| பள்ளியில் நடத்தப்படும் தமிழ்க் கலைவிழாக்கள் | • தமிழ் நாடகங்களில் பார்வையாளர்களாகவும், பங்கேற்பாளர்களாகவும் பங்கெடுக்கும் வாய்ப்பு<br>• தமிழைச் சரளமாகப் பேசும் பயிற்சிக்கு வாய்ப்பு<br>• தமிழில் படைப்புகளைப் படைக்கப் புத்தாக்கப் பயிற்சி, தமிழிலேயே சிந்தித்து எழுத, பேசப் பயிற்சியும் வாய்ப்பும்<br>• தமிழ்க் கலைகளின் பழமை, **மாண்பு,** புதுமை, கலாச்சாரப் பெருமை முதலியனவற்றை அறிந்து மகிழும் வாய்ப்பு<br>• மாணவர்களுக்குள் புதையுண்டு கிடக்கும் திறன்களை வெளிக்கொண்டுவர வாய்ப்பளிக்கும் |
| கருத்து 4 | |
| தமிழ்மொழி தொடர்பான பல்வேறு போட்டிகளில் பங்கெடுத்தல், நடத்துதல் | • தமிழ்மொழிப் போட்டிகள் இல்லாத குறை நீங்குதல்<br>• போட்டிகளில் பங்கெடுப்பதால் சுயமாகச் சிந்தித்தல், தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் தொடர்பான **தரவுகளைக்** கணினியில் தேடும் வாய்ப்பு<br>• இன்றைய மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்தில் அதிகம் ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பதால், இணையம் மூலம் தமிழுக்காகத் தகவல்களைச் சேர்ப்பது அவர்களை வெகுவாகக் கவரும்<br>• தமிழ்த் தட்டச்சுச் செய்யும் வாய்ப்பு, தமிழ் இணையப் பக்கங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு<br>• போட்டிகளைப் பள்ளி, கல்லூரி சார்பாக நடத்தும்போது தமிழிலேயே அறிவிப்பு, பேச்சு முதலியனவற்றைச் செய்வதால் ஏற்படும் மொழிப் புழக்கம் |
| முடிவுரை | |
| | • ‘கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை’ என்னும் திருக்குறளுக்கேற்ப,<br>• தமிழைப் படிக்காவிட்டாலும் காதில் கேட்டாவது மொழிப்புழக்கம் வளர<br>• தமிழ்மொழியின் ஆழத்தையும் அகலத்தையும் உணர்த்த நடத்தும் இலக்கியப் பொழிவுகள் மூலமாகத் தமிழின் பெருமையை உணர<br>• தமிழின் மீது கொண்டுள்ள அறியாமை அகல<br>• ஆர்வத்துடன் தமிழ் பயில, தடையின்றிப் பேச, தமிழில் படைப்புகளை உருவாக்க<br>தமிழ்மொழியில் விரிந்த அறிவு பெற, வாழும் மொழியாகச் சிங்கையில் நிலைபெறச் சிங்கப்பூரில் நடக்கும் தமிழ்மொழி விழாக்கள் பெரிதும் உதவுகின்றன |

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்:**

- 'தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' - பாரதிதாசன்
- 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' - பாரதியார்
- 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' - பாரதியார்
- 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' - பாரதிதாசன்
- 'எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!' - மனோன்மணியம் சுந்தரனார்
- 'தமிழன் என்றோர் இனம் உண்டு! தனியே அவர்க்கு ஒரு குணம் உண்டு!
அமிழ்தம் அவனது மொழியாகும் அன்பே அவனது வழியாகும்' - நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை
- 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' - நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

**அருஞ்சொற்பொருள்**

| | |
|---|---|
| புழக்கம் | பயன்பாடு |
| அகண்ட | விரிந்த |
| ஒப்புவிப்பு | மனனம் செய்து கூறுதல் |
| பட்டறைகள் | workshops |
| தரவுகளை | தகவல்களை |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + achieve BIG

3. **இக்காலச்சிங்கப்பூரர்களுள் பெரும்பாலானோர் தன்னலமிக்கவர்களாக இருக்கிறார்கள். இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா, ஏன்?** (உதவிக் குறிப்புகள் - *ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்தின் அடிப்படையில்)*

**முன்னுரை**

- தன்னலம் மறந்து பிறர் நலத்தில் அக்கறை
- பொதுநலம் போற்றும் தலைவர்கள் நிறைந்த நாடு
- **மூப்படைந்து** வரும் சமூகத்தைப் **பேணி**க் காத்தல்

**இடையுரை**

- சமூக மன்றங்களில் தொண்டூழியர்களின் சேவை
- பேரிடர் காலத்தில் உலகநாடுகளுக்கு உதவும் **செஞ்சிலுவை** இயக்கச் சிங்கப்பூரர்கள்
- பல்லின மக்கள் வாழும் சூழலில் சகிப்புத்தன்மையுடன் நடத்தல்
- வெளிநாட்டு ஊழியர்களுக்கு உதவிகள் புரிதல்
- தன்னலம் மறந்து நாட்டிற்காக இராணுவச் சேவை
- சிண்டா என்ற இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தில் நூற்றுக்கணக்கான இளம் தொண்டூழியர்கள் இருக்கிறார்கள்
- இளம் வயதிலிருந்தே மாணவர்களுக்குப் பொதுநலத்தைப் பற்றிப் பள்ளிகள் கற்றுக்கொடுக்கின்றன
- சமூகச் சேவை என்பது பள்ளிகளில் கட்டாயச் சேவையாக இருக்கிறது
- இரத்தத் தானம் நடவடிக்கை, நிதி திரட்டும் நடவடிக்கை போன்ற தன்னலம் பாராத செயல்களில் அதிகமான இளையர்கள் ஈடுபடுகிறார்கள்
- சிங்கப்பூர்க் காவல் படையினர் தன்னலம் பாராது மக்களின் பாதுகாப்பிற்காக அல்லும் பகலும் உழைக்கிறார்கள் – (அண்மையில் நம் முன்னாள் மதியுரை அமைச்சர் திரு லீ குவான் யூ அவர்களின் அஞ்சலியின்போது மழை வெயில் என்றும் பாராது காவல் படையினரும், தொண்டூழியர்களும் நாள்கணக்கில் பணிபுரிந்தனர்)
- பேருந்துகளிலும் பெருவிரைவுப் போக்குவரத்து இரயிலிலும் முதியோருக்கு முதலிடம் வழங்குகிறார்கள்
- புகைமூட்டக் காலத்தில் சிங்கப்பூரர்கள் முதியோர் இல்லங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று இலவச முகக்கவசங்களை **விநியோகம்** செய்தார்கள்
- மாணவர்கள் ஆண்டுதோறும் இளையர் தினத்தன்று (Youth Day) ஆதரவற்ற சிறுவர் இல்லங்களுக்குப் பள்ளிகள்மூலம் நன்கொடை வழங்குகிறார்கள்
- பேரிடர்களால் பாதிக்கப்படும் உலக நாடுகளுக்கு நன்கொடை திரட்டி உதவுகிறார்கள் (எ. கா – அண்மையில் சென்னையில் ஏற்பட்ட பெரும் வெள்ள நிவாரணத்திற்காகச் சிங்கப்பூர் மக்கள் லிட்டில் இந்தியாவில் நன்கொடை திரட்டினார்கள்)

முடிவுரை

- தன்னலம் மக்கட்பண்பு அல்ல
- உலகில் யாரும் தனித்து வாழ இயலாது
- பொது நலமே சாலச் சிறந்தது

**இனிய தொடர்கள்**

- ‘அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு’
- ‘பிறர்நலம் கருதி உழைத்தலே நோன்பு’
- ‘அறம் செய விரும்பு’
- ‘உலகம் வேண்டுவது ஒழுக்கமே! சுயநலம் தீய ஒழுக்கம்! பொதுநலம் நல்லொழுக்கம்’ - விவேகானந்தர்
- ‘என் கடன் **பணி** செய்து கிடப்பதே’ - திருநாவுக்கரசர்
- ‘மக்களுக்குச் செய்யும் சேவை மகேசனுக்குச் செய்யும் சேவை’
- ‘தனிமரம் தோப்பாகாது’
- ‘அன்பிற்கு உண்டோ அடைக்குந் தாழ்’
- ‘வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை’
- ‘தட்டிப்பறிப்பவன் வாழ்ந்ததில்லை, விட்டுக்கொடுப்பவன் வீழ்ந்ததில்லை’
- ‘எது என்றபோதும் பொது என்று வைத்து வாழ்கின்ற பேரை வாழ்த்திடுவோம்’
- ‘வலது கை கொடுப்பதை இடது கை அறியாது’
- ‘தர்மம் தலைகாக்கும்’
- ‘சுயநலம் உள்ள மனிதன் தூற்றப்படுவான், பொதுநலம் உள்ள மனிதன் போற்றப்படுவான்’
- ‘உலகில் எல்லையற்றது ஒன்று உண்டு என்றால், அது பிறரிடம் அன்பு செலுத்துவதே ஆகும்’

**அருஞ்சொற்பொருள்**

| | |
|---|---|
| மூப்படைந்து | வயதாகி |
| பேணி | காக்க |
| செஞ்சிலுவை | ஆபத்துக்காலத்தில் உதவி செய்யும் ஒரு சங்கம் / Redcross |
| விநியோகம் | வழங்குவது / distribution |
| பணி | வேலை |

# மின்னஞ்சல் வினாக்கள்

## தொகுதி 1

### 1a. அலுவலக மின்னஞ்சல் - புகார் செய்தல்

**வினா:**

பின்வரும் பகுதியைப் படித்து, ஏற்ற விடையை மின்னஞ்சல்வழி எழுதுக.

நீ வசிக்கும் அடுக்குமாடி வீட்டின் கீழ்த்தளத்தில் இளைஞர்கள் சிலர் இரவு நேரங்களில் மற்றவர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் வகையில் அளவுக்கு அதிகமாக ஆரவாரம் செய்து கொட்டமடிக்கிறார்கள். அக்கம் பக்கத்தார் பலமுறை எடுத்துச் சொல்லியும், அவர்கள் தொடர்ந்து இச்செயல்களைச் செய்கின்றனர். இது மற்றவர்களின் தூக்கத்தை மட்டும் கெடுக்காமல், படிக்கும் மாணவர்களுக்கும் மிகத் தொந்தரவாக இருக்கிறது. இப்பிரச்சினையைப் பற்றியும், இதுபோன்ற செயல்கள் மீண்டும் நடக்காமலும் இருக்க சில ஆலோனைகளைக் கூறியும் அருகிலிருக்கும் காவல் நிலையத்திற்கு ஒரு மின்னஞ்சல் எழுதவும்.

அனுப்புநர்: hari@outlook.com

பெறுநர்: npp@gov.sg

WORDSMITH
BEYOND LEARNING

### 1b. உறவுமுறை மின்னஞ்சல் - அறிவுரை கேட்டல்



# சிகரம் - Tamil Composition (Paper 1)
# மின்னஞ்சல் விடைகள்

## தொகுதி 1

**1a.** அலுவலக மின்னஞ்சல் - புகார் செய்தல்




மதிப்பிற்குரிய காவல் அதிகாரி அவர்களுக்கு,

வணக்கம்.

என் பெயர் ஹரி. நான் அங் மோ கியோ வட்டாரத்தில், கட்டிட எண் 214ல் குடியிருக்கிறேன். எங்கள் அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ் சில இளைஞர்கள், அனைவரும் அயர்ந்து உறங்கும் இரவின் மடியில் தினமும் கொட்டமடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களால் ஏற்படும் தொந்தரவுகளைப் பொறுத்துக்கொண்டு இருக்க இயலவில்லை என்பதால் பெரியவர்கள் சிலர் அவர்களிடம் எடுத்துக் கூறியும், இந்த இளைஞர்கள் பொருட்படுத்தவில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்பொழுது திடீரென்று இவர்களின் ஆரவாரத்தால் உறக்கம் கலைந்துபோகின்றது. குழந்தைகள் அழுகின்றன. மீண்டும் உறக்கம்வர நெடுநேரம் ஆகின்றது. இதனால் கண் எரிச்சல், உடலில் சோர்வு, உணவு செரிமானம் இன்மை, தலைவலி போன்றவற்றால் அவதிப்படுகிறோம்.

மேலும் இக்குடியிருப்பில் உடல்நலம் குறைந்தவர்கள், மாணவர்கள், முதியவர்கள், பள்ளிக்குச் செல்பவர்கள் என்று அனைவரும் இருக்கிறார்கள். இவர்கள் இந்த இளைஞர்கள் செய்யும் அட்டகாசங்களால் அனுதினமும் போதுமான அளவு தூக்கம் இல்லாமல் அல்லலுறுகின்றனர். நாள்முழுவதும் பலவிதமான பணிகளை முடித்துவிட்டு சோர்வுடன் வீடு திரும்புபவர்களுக்கு நல்ல உறக்கம் அவசியம் தேவை. நன்றாக

உறங்கினால்தான் அடுத்தநாள் பணிகளைச் செவ்வனே செய்ய முடியும். உடலுக்கும், மனத்திற்கும், கண்களுக்கும் புத்துணர்ச்சி தருவது நல்ல உறக்கம்தான். அதுமட்டுமன்றி, உறக்கம் கெடுவது இளைஞர்களாகிய உங்களுக்கும் துன்பம்தானே என்றும் எடுத்துக் கூறினேன். ஆனால் அவர்களோ 'இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம் இதுதான் எங்கள் உலகம்', என்றிருக்கின்றனர்.

'இப்படித்தான் வாழவேண்டும் என்று இல்லாமல் எப்படியும் வாழலாம்' என்று மனம்போன போக்கிலே 'நானே ராஜா நானே மந்திரி' என்னும் மனப்பான்மையுடன் தவறுசெய்யும் பலரை நீங்கள் நல்வழிப் படுத்தியிருக்கிறீர்கள். மேலும், எனக்குத் தெரிந்த சில ஆலோசனைகளை உங்களிடம் முன்வைக்கிறேன். இவர்களைப் போன்ற இளைஞர்களுக்கு நீங்கள் தக்க தண்டனை வழங்கலாம். அதிகப்படியான அபராதங்களை விதிக்கலாம் அல்லது அடுக்குமாடிக் கீழ்த்தளங்களில் உள்ள அறிவிப்புப் பலகைகளில் இளைஞர்கள் கூடி அரட்டையடிக்கக் கூடாது என்று எழுதிப்போடலாம். மீறினால், அபராதம் விதிக்கலாம்.

உறக்கமின்றித் தவிக்கும் எங்களுக்கு உதவுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். உங்களால் நிம்மதி ஏற்படும். இரவில் அமைதியான சூழல் இங்கு நிலவும்.

நன்றி

இப்படிக்கு

ஹரி

WORDSMITH
BEYOND LEARNING

**1b. உறவுமுறை மின்னஞ்சல் - அறிவுரை கேட்டல்**

